எனது வாழ்க்கையே எனது செய்தி

# காந்தீயம்

அகில இலங்கை காந்திசேவா சங்கத்தின் இரு திங்கள் வெளியீடு

Publication of All Ceylon Gandhi Seva Sangam

மலர் - 23 இதழ் - 01. / 2007- ஒக்டோபர் - நவம்பர் விலை ரூபா 10/-

## அஹிம்சை தினத்தை முன்னிட்டு ஐக்கிய நாடுகள் பொதுச்சபை அறிக்கை

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் ஏ/61/எல்.62 ஆவணம் கொண்டிருக்கக் கூடிய சர்வதேச அஹிம்சை தினமாக நடைமுறைக்கு கொண்டு வரும் அத்தியாயத்தின் பிரகாரம் சபையின் 62 ஆவது பருவம் முதல் ஒவ்வொரு ஆண்டும் ஒக்டோபர் மாதம் 2ஆம் திகதியை சர்வதேச தினமாக அனுஷ்டிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

அஹிம்சையை மனதில் தாங்கிச் செல்லுதல், சகிப்புத் தன்மை, சகலருக்குமான அடிப்படைச் சுதந்திரம் மற்றும் மனித உரிமைகளுக்கு முழு மரியாதை கொடுத்தல், ஜனநாயகம், அபிவிருத்தி, பரஸ்பர புரிந்துணர்வு, வேற்றுமையில் மரியாதை ஆகிய அம்சங்கள் மூலமாக உள்ளகத் தொடர்புக்கும் பரஸ்பர பலப்படுத்தலுக்கும் எல்லா அரசுப் பிரதிநிதிகள், ஐ.நா.ஸ்தாபனங்கள், பிராந்திய மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களை இந்த அஹிம்சை செய்தியை பரவச்செய்வதற்கும் இந்த சர்வதேச தினத்தை ஞாபகார்த்தமாகக் கொண்டாடுவதற்கும் ஐ.நா.சபை அழைக்கின்றது. இந்த அஹிம்சை தொடர்பான செய்தியை கல்வி மூலமாகவும் பொதுமக்கள் அமைப்புக்கள் மூலமாகவும் பரவலடையச் செய்ய முடியும்.

இத்தினத்தை கொண்டாடுவதற்கான செயற்பாடுகளை ஒழுங்கு செய்வதற்கு உறுப்பு நாடுகளின் ஒத்துழைப்பு, ஐ.நாவினதும் செயலகத்தினதும் இருக்கும் வளங்களைக் கொண்டு பெறப்படும் என்று பிரகடனம் வேண்டுகின்றது.

சமாதானம் மற்றும் அஹிம்சை பற்றிய சர்வதேச மாநாட்டில் பட்டினி, வறுமை பற்றி தீவிரமாகப் பேசப்படும் போது 21ஆம் நூற்றாண்டில் காந்திய தத்துவம் தெளிவாக உச்சரிக்கப்படும் எனவும் அஹிம்சை தினத்தை நடைமுறையில் கொண்டு வரும் எண்ணம் மேற்படி மாநாட்டில் ஆதரிக்கப்படும் எனவும் இந்திய அரசாங்கத்தின் வெளிவிவகாரங்களுக்கான அமைச்சர் Anand Sharma கூறினார்.

மகாத்மாகாந்தி தலைமை தாங்கிய அஹிம்சை மாதிரிக்கு உலகம் வழங்குகின்ற பிரதிபலிப்பு இந்தத் தீர்மானத்திற்கான ஒத்துழைப்பின் மூலமாக வெளிப்படுகின்றதென்றும், காலனித்துவத்தைப் பரவச் செய்த Badshah Khan போன்ற தலைவர்களும் மகாத்மாவின் அஹிம்சை மாதிரியை கொண்டு வந்தார்கள் என்றும் Anand Sharma மேலும் தெரிவித்தார்.

அஹிம்சை கோட்பாடு உலக இணக்கத்தை ஏற்படுத்துவதை வெளிப்படுத்துவதற்கு ஒரு சமிக்ஞையாக இந்த வரைபு இருந்தது.

1999 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகள் பிரகடனம் மற்றும் சமாதான கலாசார செயற்படுத்துகைக்கான நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றின் இலக்கை அடைவதிலும் நிறைவேற்றுவதிலும் அஹிம்சை முக்கியமான பங்களிப்பை வழங்கியிருந்தது.

**பொது தகவல் திணைக்களம்**
**செய்தி மற்றும் ஊடகப் பிரிவு**
**நியூயோர்க்.**

### இது காந்தி பிறந்த மாதம்



**அண்ணலுக்கு அகவை 138**

### மணிவிழா ஆண்டில் !

அகில இலங்கை காந்தி சேவா சங்கம் ஆரம்பிக்கப்பட்டு 2008இல் அறுபது ஆண்டுகள் பூர்த்தியடைகின்றது. சமுதாயத்திற்கு தொண்டாற்றும் நோக்கிலும் நல்ல சிந்தனைகளை வளர்ப்பதற்குமாக சங்கத்தை நிறுவிய எமது ஸ்தாபகத் தலைவர்களை இந்நேரத்தில் நினைவு கூரும் அதே வேளை தியாக உணர்வுடன் இன்று உழைத்துவரும் உறுப்பினர்கள் அனைவருக்கும் எமது வாழ்த்துக்கள் உரித்தாகுக. 60 ஆவது அகவையில் காலடி வைக்கும் காந்தீயம் இதழிற்கு வாசகராகிய நீங்கள் தொடர்ந்து வழங்கிவரும் ஆதரவுக்கும் எமது நன்றிகள்

ஒக்டோபர் 2, சர்வதேச அஹிம்சை தினத்தை முன்னிட்டு
"காந்தீயம்" அஹிம்சை தின சிறப்பிதழாக வெளிவருகின்றது.

**கடமையைச் சரிவரச் செய்யுங்கள்**

# சர்வதேச அஹிம்சை தினம்

மோகனதாஸ் கரம்சந்த் (மகாத்மா) காந்தியின் பிறந்த தினமான ஒக்டோபர் 2ஆம் திகதியை சர்வதேச அஹிம்சை தினமாக பிரசுரம் செய்வதற்கும் நடைமுறையில் கொண்டு வருவதற்குமான இந்திய தீர்மானம் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டதால் இந்தியா ஒரு சிறிய ஆனால் முக்கியமான வெற்றி கண்டது.

மகாத்மா காந்தியின் பிறந்த ஆண்டு விழாவை சர்வதேச ரீதியாக அஹிம்சை நாளாக பிரசுரம் செய்யும் தீர்மானத்தை இவ்வருடம் மே மாதம் 31ஆம் திகதி ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் ஆலோசனைக்கு வைத்தது.

மகாத்மாவின் பிறந்த நாள் ஞாபகார்த்தத்தை கொண்டாடுவதற்கான இந்தத் தீர்மானம் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் சமாதான கலாசார பாகத்தின் 44 ஆவது விடயத்தின் கீழ் எடுக்கப்பட்டதோடு ஐக்கிய நாடுகள் சபையின் 142 உறுப்பு நாடுகளின் ஆதரவும் பெறப்பட்டது.

இந்தத் தீர்மானம் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 62 ஆவது கூட்டத் தொடரில் இருந்து நடைமுறைக்கு வருவதாகவும், செப்ரெம்பர் மாத தொடக்கத்தில் இருந்து ஒக்டோபர் 2 வரை இவ்வருடமும் தொடர்ந்து வருகின்ற ஒவ்வொரு வருடமும் சர்வதேச அஹிம்சை தினம் ஞாபகார்த்தமாகக் கொண்டாடப்படும் என்றும் பிரகடனத்தின் திட்டக்குறிப்பு கூறுகின்றது.

மகாத்மா காந்தியின் எண்ணக்கருக்களுக்கு அங்கீகாரத்துக்கான ஒரு சிறு அடையாளமாக இந்த செயற்றிட்டம், காந்திஜி நடைமுறையில் கொண்டுவந்த சத்தியாக்கிரகத்தின் (அஹிம்சை - ஒத்துழையாமை) நூறாவது ஆண்டைக் கொண்டாடுவதற்கு இந்த வருடத்திற்கு முன்னர் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு மாநாட்டில் சர்ச்சைக்கு கொண்டுவரப்பட்டதோடு ஒருவித ஆட்சேபத்திற்கும் உள்ளானது.

மகாத்மா காந்தியின் சத்தியாக்கிரக ஆரம்ப ஞாபகார்த்தத்தைக் கொண்டாடுவதற்கு காங்கிரஸ் கட்சி கடந்த ஜனவரியில் 91 நாடுகளினதும் 122 சர்வதேச ஸ்தாபனங்களினதும் பிரதிநிதிகளுடன் சர்வதேச மாநாடு ஒன்றைக் கூட்டியது.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் இந்த தீர்மானத்தை பிரேரிப்பதற்கு இந்திய வெளிவிவகார அமைச்சர் Anand Sharma அரசினால் நியமிக்கப்பட்டார். அமைச்சர் நியூயோர்க்கில் நடைபெற்ற சபையின் கூட்டத்தில் சொற்பொழிவு ஆற்றியதாக அமைச்சரின் அலுவலகம் தெரிவித்தது.

இந்த விசாலமான பரந்த 130 அனுசரணையாளர்களின் ஒத்துழைப்பு என்பது சர்வதேசம் இவ்விடயத்தில் மகாத்மா காந்தியின் மேல் வைத்துள்ள அளவிடமுடியாத மரியாதையைக் காட்டுவதாக MEA பேச்சாளர் Navtej Sarna கூறினார்.

ஐக்கிய நாடுகள் சபையில் சந்தோச ஆரவாரம் மத்தியில் திரையிடப்பட்டதும் கவனிக்கத்தக்கதாகவும் இருந்த 2006ல் வெளிவந்த "Lage Rabo Munnabhai' என்ற திரைப்படம் மகாத்மா காந்தியினுடைய எண்ணக்கருக்கள் எவ்வாறு மும்பை திருடனில் சாதகமான மாற்றத்தை ஏற்படுத்துவதில் செல்வாக்குச் செலுத்தியது என்பதைக் காட்டியது.

நன்றி: **Hindustan Times**
**New Delhi, June 15,2007**

சத்தியாக்கிரகத்தில் தோல்வி என்ற பேச்சே கிடையாது. சத்தியாக்கிரகம் என்பது எல்லாக்காலங்களுக்கும் பொருந்தக்கூடிய ஒரு நியதி.

-மகாத்மா காந்தி-

# அஹிம்சை தினத்தை முன்னிட்டு அகில இலங்கை காந்தி சேவாசங்கம் அறிக்கை

(செப்ரெம்பர் 20, 2007)

மகாத்மா காந்தியடிகளின் ஜயந்தி தினமான அக்டோபர் 2ஆம் திகதியை ஐக்கிய நாடுகள் சபை சர்வதேச அஹிம்சை தினமாகப் பிரகடனம் செய்துள்ளது.

இந்தியாவின் தேசபிதா காந்தியடிகள் இந்திய நாட்டை அந்நிய ஆதிக்கத்திலிருந்து மீட்கவும் இந்திய சமூகத்தின் துன்பத்தைப் போக்கவும் பயன்படுத்திய ஆயுதமே அஹிம்சை. அஹிம்சையைக் கடைப்பிடித்தல் என்பது வாளின் முனையில் நடப்பதைப் போன்றது.

காந்தியடிகளின் சிந்தனைகள் இந்தியாவுக்கு மட்டுமன்றி உலகளாவிய ரீதியில் பொதுத் தத்துவமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதை ஐ.நா.வின் இப்பிரகடனம் நிரூபித்துள்ளது.

இன்று உலக அளவில் முரண்பாடுகளை நீக்குதல், வன்முறையற்ற தொடர்பாடலை விருத்தி செய்தல், போன்ற கருத்தியல்கள் வளர்வதற்கும் மகாத்மாவின் அஹிம்சா தத்துவமே அடிப்படையாக விளங்குகின்றது. மேலும் "காந்தீய கற்கை நெறியும் சமாதான விஞ்ஞானமும்" என்ற பாடநெறி பல்கலைக்கழக பட்டப்படிப்புக்குரிய பாடநெறியாக மாறியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த வகையில் அடிகளாரின் பிறந்த தினத்தைசர்வதேச அஹிம்சை தினமாகப் பிரகடனம் செய்த ஐ.நா.வின் தீர்மானத்தை அகில இலங்கை காந்திசேவாசங்கம் சிரம்தாழ்த்தி வரவேற்கிறது. அன்றைய நாளில் பாடசாலைகளிலும் பொதுநிறுவனங்களிலும் காந்திஜியின் அஹிம்சா தத்துவம் பற்றிய கருத்துக்களைப் பகிருமாறும் மரக்கன்று ஒன்றை நாட்டி இந்நாளை நினைவு கூருமாறும் எமது சங்கம் கேட்டுக் கொள்கிறது.

# சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்ட அஹிம்சை தினம்

(காந்தீயம் விசேட நிருபர்)

காந்தியடிகளின் 138 ஆவது ஜயந்தி தினம் அகில இலங்கை காந்திசேவா சங்கத்தினால் இம்முறையும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. யாழ்ப்பாணத்தில் பிரதான நிகழ்வு ஆஸ்பத்திரி வீதியிலுள்ள அடிகளாரின் உருவச்சிலையடியிலும் சங்க அலுவலகத்திலும் இடம் பெற்றது. விஷேடமாக மரக்கன்றுகள் பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டு நாட்டப்பட்டன. மில்க்வைற் அதிபர் இ.தவகோபால் மரக்கன்றுகளை இலவசமாக வழங்கி உதவியிருந்தார்.

மன்னாரில் இலண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் இல்லத்தில் வைத்திய கலாநிதி ஆ.அரசக்கோன் தலைமையில் அஹிம்சை தினம் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் மன்னார் மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியத் தலைவர் வைத்திய கலாநிதி மு.கதிர்காமநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மரக்கன்று ஒன்றை நாட்டி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து இல்லச் சிறுவர்களின் பஜனை, காந்தி பற்றிய உரைகள், அஹிம்சை, சத்தியம் தொடர்பான கவிதை வாசிப்பு என்பன இடம்பெற்றன.

வவுனியா செட்டிகுளம் மகா வித்தியாலயத்தில் அதிபர் எஸ். ஜேசுதாசன் தலைமையில் நிகழ்வு இடம் பெற்றது. மாணவர்களின் அஹிம்சை தின சிறப்பு பேச்சுக்கள் நடைபெற்றன. ஆசிரியர்களான சத்தியசாயிபாவா, விஜிந்தன் மற்றும் செட்டிகுளம் பொது சுகாதார பரிசோதகர் எஸ்.நாகரத்தினம் ஆகியோரும் காந்தி நினைவைப் பகிர்ந்து கொண்டனர்.

எனது வாழ்க்கையே எனது செய்தி

# காந்தீயம்

காந்தி ஆண்டு 139, 2007 ஒக்டோபர் - நவம்பர்.

## அகிம்சையின் வடிவம்

இந்திய நாட்டின் தேசபிதா காந்தியடிகளின் 138 ஆவது பிறந்த தினம் ஐப்பசி 2 ஆகும். பாரதத்தின் விடுதலைக்காக பெருந் தொண்டாற்றியவர் மகாத்மா காந்தி. அஹிம்சை என்ற ஒப்பற்ற ஆயுதத்தை இவ்வுலகிற்கு அறிமுகம் செய்த மாமனிதர் அவர். அஹிம்சை; சகிப்புத்தன்மை என்பவற்றின் மூலம் உலகில் அமைதியை நிலைநாட்டவும், விடுதலை பெறவும் முடியும் என்று அவர் உறுதியாக நம்பினார். அதன் படி வாழ்ந்தும் காட்டினார். அன்பு நெறி, ஆன்மீக நெறி, தொண்டு நெறி ஆகிய வழிகளில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து சத்தியம் என்ற உயர் பண்புக்காக தன்வாழ்வை தியாகம் செய்த பெரும்மகான் அவர்.

இம்முறை அடிகளாரின் பிறந்த தினமான அக்டோபர் 2ஆம் திகதியை ஐக்கிய நாடுகள் சபை சர்வதேச அஹிம்சை தினமாகப் பிரகடனம் செய்துள்ளது. காந்தியடிகளின் சிந்தனைகள் இந்திய நாட்டுக்குள் மட்டுப்படுத்தப்பட்ட ஒன்றாக அன்றி முழு உலகும் ஏற்றுக்கொள்ளும் தத்துவமாக வியாபகம் பெற்று வருகின்றமை, ஐ.நா சபையின் பிரகடனம் மூலமாக காணக்கூடிய ஒன்றாகும். இன்று உலகளாவிய ரீதியில் விடுதலைக்கான போராட்டங்களும், அநீதி, அடக்குமுறைக்கு எதிரான மக்கள் எழுச்சியும், அஹிம்சை முறையிலான எதிர்ப்பு நடவடிக்கைகளும், அறவழியிலான வேலை முன்னெடுப்புக்களும் புதிய திருப்பங்களை நோக்கி உலக இயங்கியலை இட்டுச் செல்கின்றமை வெளிப்படையான ஒன்றாகும். இதற்கு அண்ணலின் அஹிம்சா தத்துவமும் வாழ்க்கை நெறியும் அடிப்படையாக விளங்குகின்றன என்றால் அதற்கு மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

இனி அஹிம்சை பற்றி மகாத்மா காந்தி கூறிய கருத்துக்கள் சிலவற்றை நோக்குவோம்.

"அஹிம்சா தத்துவம் ஒரு நாட்டை பரிசுத்தமான ஜனநாயகத்தில் கொண்டு போய்விடும். கோழைத்தனம், ஹிம்சை இரண்டில் எதை மேற்கொள்வது என்று தவிர்க்க முடியாத சந்தர்ப்பம் ஏற்பட்டால் அஹிம்சையை மேற்கொள்ளும்படியே நான் உபதேசிப்பேன். தற்காப்புக்கு அடுத்தவனைக் கொல்லும் சக்தி தேவையில்லை. தானே சாவதற்குரிய மனவுறுதிதான் தேவை.

அன்பும், அஹிம்சையும் உள்ளத்தில் ஊறியிருந்தாலன்றிச் சேவை செய்வதென்பது சாத்தியமே இல்லை. அன்பு எதையும் கேட்பதில்லை கொடுக்கிறது.

உண்மையினாலும் உலகத்தையே வெற்றி கொள்ள முடியும் என்பது என் உறுதியான நம்பிக்கை.

அஹிம்சைப் போர் கூர்மையான வாளைவிடப் பயங்கரமானது. அஹிம்சையும் சத்தியமுமே எனது கடவுள். என் எல்லா செயல்களிலும் மணிகளைக் கோர்க்கும் இழைபோல் அஹிம்சை இருக்கிறது. அஹிம்சை இடம்பெறாத ஒரு செயலையும் நான் செய்ததில்லை.

உண்மையான அன்பை வாய்ச்சொல் வெளிப்படுத்தாது; சேவை தான் வெளிப்படுத்தும் என்கிறார் காந்தி.. மகாத்மா காந்தி தூரநோக்குடைய சிந்தனாவாதியாக விளங்கினார். அடிமட்டத்திலுள்ள மக்களின் வாழ்வை உயர்த்துவதற்குப் பல வழிகளில் முயன்றார். சமூகப்புரட்சி இயந்திரப் பெருக்கத்தாலோ, பாரிய திட்டங்களினாலோ அமைவதில்லை; மனப்புரட்சி ஒன்றினாலேயே அமையும் என்பதை விளங்கி அந்த மனப்புரட்சி கிராமங்களிலே ஊற்றெடுத்து நாடு முழுவதும் பரந்து பெருக வேண்டும் என்று கூறி 'கிராமத்துவம்' என்ற புதியதொரு கொள்கையைக் கண்ட சமுதாயத் தொண்டராக விளங்கினார்.

1930 ஆம் ஆண்டு தண்டி யாத்திரை நடந்து கொண்டிருந்தது. காந்திஜியுடன் இரவு நேரங்களில் ஒரு கனமான விளக்கையும் அதை வைக்க ஒரு இருக்கையையும் ஒரு ஆள் தூக்கிச் செல்வது வழக்கம். காந்திஜி வேகமாக நடக்கும் போது அவருடன் வேகமாக ஓடிச் செல்லும்படி அந்த ஆள் வற்புறுத்தப்பட்டார். இது காந்திஜிக்குத் தெரிய வந்தது.

உடனே அவர் "பெரிய பாரத்தைச் சுமந்து கொண்டு ஒரு ஆளை வேகமாக ஓடும்படி வற்புறுத்துவது அல்லது துன்புறுத்துவது மனிதத் தன்மையல்ல இதயமற்றதன்மையைத் தான் அது காட்டுகிறது. அந்த பாரத்தை நம் தொண்டர்களில் ஒருவர் ஏன் சுமக்கக் கூடாது? நாம் இவ்விதம் நடந்து கொண்டால் மக்களிடம் நாம் பேசும் சுயராஜ்யத்திற்கு அர்த்தமேயில்லை" என்றார். மகாத்மாவின் மனிதாபிமானத்திற்கு இது ஓர் எடுத்துக்காட்டு.

காந்திஜி மகாத்மா என்ற பெயரோடு விளங்கிய சமயம். ஒரு பொதுக் கூட்டத்தில் அவரை மிஸ்டர் காந்தி என்றழைத்து ஆங்கிலத்தில் உரையாற்றினார் ஜின்னா. அருகிலிருந்த மௌலானா முகமது அலி முதலியோர் மகாத்மா என்றழைக்கும்படி ஜின்னாவைக் கேட்டுக்கொண்டனர். மக்களும் அவ்வாறே கூச்சலிட்டனர். ஆனால் ஜின்னா தம் பிடிவாதத்தை விடவில்லை. இந்நிலைமையில் காந்திஜி எழுந்து, "நான் மகாத்மா இல்லை; சாதாரண மனிதன் தான். ஜின்னா அவர்களின் சுதந்திர எண்ணத்தில் தலையிடக் கூடாது. நம் எண்ணங்களைப் பிறர் மீது சுமத்தினால் புனித சுயராஜ்யத்தைப் அடையமாட்டோம். மற்றவரைப் பற்றி ஒருவர் எவ்விதக் கருத்துக் கொண்டிருந்தால் என்ன என்று இருத்தலே நலம்" என்றார். மக்கள் அமைதியாக இருந்தனர். கருத்துச் சுதந்திரத்திற்கு மகாத்மா வழங்கிய இடம் இதிலிருந்து புலனாகின்றது.

அண்ணல் காந்தியடிகளின் வரலாறு உலக மனிதகுல வரலாற்றோடு இணைந்து புகழ் பெற்ற வரலாறாகும். உலகத்திற்கொரு குடிமகன் என்று எடுத்தால் வரலாற்றுக்கு எட்டியவரையில் அண்ணல் பெயரே தெரிகிறது. அண்ணல் சிந்தனையாளர், எழுத்தாளர், நாநலமிக்கவர், உழைப்பாளர், அன்பின் திருவுரு, அருளின் ஆக்கம், அஹிம்சையின் வடிவம், சத்தியத்தின் சின்னம், தவத்தின் திருவுரு, ஒதுக்கப்பட்டவர்களுக்கு உதயசூரியன், வறியவர்களுக்கு வாழ்வளிக்கும் மருந்து, சாதிச்சழக்குகளுக்கு சவுக்கு, இன மொழி வகுப்பு வேறுபாடுகளுக்கு வெடிகுண்டு, விடுதலை வீரர், சீலத்தின் சிற்பம், எங்கள் காந்தி மகான்.

-எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி.

### 'ஆன்மவிசாரம்' மறுபதிப்பு

ஸ்ரீமத் சோமாஸ்கந்தவேள் சுவாமிகளின் அருளாணைப் பிரகாரம் சரஸ்வதி - பிருந்தாவனம் அறக்கட்டளையின் அனுசரணையுடன் 'ஆன்மவிசாரம்' மறுபதிப்பு வெளிவந்துள்ளது. இதன் ஆசிரியர் ஹே.சுப்பிரமணிய ஐயர் (1857 - 1912) ஆவார். ஸ்ரீ சிவகுரு நாத பீடத்தால் வெளியிடப்பட்டுள்ள இந்நூலைப்படிப்பதன் மூலம் உலக நியதியை உணர்ந்து மன அமைதியைப் பெறலாம். ஸ்ரீ சிவகுருநாதபீடம், மகாதேவ ஆச்சிரமம் 18, குமாரசுவாமி வீதி கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ரூபா 100 விலையில் 'ஆன்மவிசாரம்' பெற்றுக்கொள்ளமுடியும்.

# காந்தி ஜயந்தி தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணத்தில்........



யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள அடிகளாரின் உருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்திய அகில இலங்கை காந்தி சேவா சங்க நிர்வாகிகள் க.இராசரத்தினம், இ.தவகோபால், அ.இராமநாதன், ஆ.வடிவேலு, ஆ.சபாரத்தினம், மா.லீலாவினோதன் ஆகியோர்.

மன்னாரில்...........









மன்னார் இலண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் இல்லத்தில் நடைபெற்ற நிகழ்வில் இல்லச் சிறுவர்கள் பஜனையில் ஈடுபடுவதையும் விசேடமாகத் தயாரிக்கப்பட்ட காந்தி படம் மாலை இட்டு வணக்கம் செலுத்தப்பட்டிருப்பதையும் ஞாபகார்த்தமாக வைத்திய கலாநிதி ஆ.அரசக்கோன் மரக்கன்று நாட்டுவதையும் காணலாம்.

வவுனியாவில்...........









வவுனியா செட்டிகுளம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற அஹிம்சை தின நிகழ்வில் அதிபர் எஸ்.ஜேசுதாசன் உரையாற்றுவதையும் "காந்தீயம்" பத்திரிகை ஆசிரியரிடமிருந்து காந்தி பேச்சில் பங்கு கொண்ட மாணவி பரிசில் பெறுவதையும், நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களில் ஒரு பகுதியினரையும், பரிசில் பெற்ற மாணவர்கள் மற்றும் அதிபர், ஆசிரியர்களுடன் நிகழ்வுக்கு ஆதரவு வழங்கிய செட்டிகுளம் பொது சுகாதார பரிசோதகர் எஸ்.நாகரத்தினம், "காந்தீயம்" ஆசிரியர் ஆகியோரையும் படங்களில் காணலாம்.

## சுவாமிகளின் நினைவு தினம்

சமாதியடைந்த ஸ்ரீமத் சோமாஸ்கந்தவேள் சுவாமிகளின் முதலாவது நினைவு தினம் (12.08.2007) கந்தர்மடம் வேதாந்த மடத்தில் அனுஷ்டிக்கப்பட்டது. தேவார இசைமணி திருஞானசம்பந்தனின் பண்ணிசையைத் தொடர்ந்து தற்போதைய குருபீடாதிபதி ஸ்ரீ வித்தியாசாகர சுவாமிகள் தலைமையில் சகல சமாதிகளுக்கும் அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. தொடர்ந்து உரைகள் இடம் பெற்றன. அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் சார்பில் உபதலைவர் ஆ.வடிவேலு சுவாமிகளின் சேவைகளை நினைவு கூர்ந்தார். யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விரிவுரையாளர்களும் அஞ்சலி உரை ஆற்றினர்.

## அகிம்சை இந்த அகிலத்தின் சொத்து

சிறப்புக் கவிதை

சகிப்புப் பண்பும் சத்திய நோன்பும்
சாதி சமயம் கடந்த அன்பும்
துகிலில் கதரும் தூயநல் வாழ்வும்
துன்பம் துடைப்பில் இன்பமும் அனைத்து
மகிமையும் கொண்ட மகாத்மா காந்தி
மனுக் குலத்திற்கு மனமுவந் தளித்த
அகிம்சை இந்த அகிலத்தின் சொத்து
அதுவும் அவரின் ஆன்மீக வித்து

ஆதிக்க வெறியும் ஆட்சியின் திமிரும்
வாதிட்டு வெல்லும் வாய் வல்லபமும்
பாதிப்புக் கொண்ட பயங்கர ஆயுத
உற்பத்தி தன்னில் ஓங்கிய உயர்வும்
நீதிக்கும் நெறிக்கும் நேரிட ராகப்
போரிட்டுக் கொள்ளும் போக்கும் கொண்டு
மோதிய காலம் முடிவிற்கு வந்திட
ஐக்கிய நாட்டின் அறிவிப்பு ஒன்று.

அக்ரோபர் இரண்டு அகிம்சை நாளெனும்
அறிவிப் போடு அதன்பணி முடியா
முக்கிய மாக முழுஉல கத்திலும்
மூண்ட போர்கள் முழுதாய் ஒழியவும்
எக்கெதிப் பட்டும் இம்சை இல்லாது
எல்லோரும் வாழ்வில் இன்புற்றிருக்கவும்
ஐக்கிய நாடே அகிம்சை வழியில்
ஆற்றிடப் பணிகள் அதிகமாய் உண்டு.

கல்வியில் ஆன்மீகம் முதலிடம் வேண்டும்
காலத்தால் அழியாத பண்பாடு வேண்டும்
கல்லாத மனிதரைக் காணாமை வேண்டும்
கலகங்கள் இல்லாத வளநாடு வேண்டும்
பொல்லாத போதைப் பொருள்மாற வேண்டும்
பொய்யோடு லஞ்சம் புரியாமை வேண்டும்
கல்லான உள்ளம் கனிந்தாக வேண்டும்
கண்ணீரில் வாழ்வோர் களித்தாக வேண்டும்

வளர்முக நாடுகள் வளம்பெற வேண்டும்
வாணிபம் வள்ளுவர் வாய்மொழி வேண்டும்
தளர்வேது மறியாத மெஞ்ஞானம் வேண்டும்
தர்மத்தின் வழி நிற்கும் சமயங்கள் வேண்டும்
விளம்பிதம் இல்லாத விஞ்ஞானம் வேண்டும்
வேலையும் வீடும் யாவர்க்கும் வேண்டும்
களங்கமே இல்லாத கண்ணியம் வேண்டும்
கருத்தோடு ஐ.நா செயற்பட வேண்டும்

ஆக்கம் :- ஆ.வடிவேலு.

## கட்டுரைப்போட்டி

மகாத்மா காந்தியின் சத்தியாக்கிரக இயக்க நூற்றாண்டு நிறைவு ஞாபகார்த்த கட்டுரைப் போட்டி ஒன்று இந்திய வம்சாவளி மக்கள் சபையின் அனுசரணையுடன் நடத்தப்படவுள்ளது.

"மகாத்மா காந்தியின் அஹிம்சை வழி அணுகுமுறையும் தற்போதைய உலக அரசியலில் அதற்குரிய அவகாசமும்" அல்லது சமாதானத்தையும் சுபீட்ச வாழ்வினையும் முன்னிறுத்த மகாத்மாவின் சத்தியாக்கிரக சித்தாந்தம் ஒரு அழுத்தமான போராட்ட கலாசாரமாகும் என்ற கருப்பொருளை மையமாக வைத்து 2500 - 3000 சொற்களில் கட்டுரை எழுதப்பட வேண்டும். 25 வயதுக்குட்பட்ட எவரும் இப்போட்டியில் பங்கு கொள்ள முடியும். கட்டுரைகளை அனுப்ப வேண்டிய முகவரி PIO Council, 241/7, Kirula Road, Colombo - 05. இறுதித்தினம் 2007.11.30.

## அன்பர் தபால்

"காந்தீயம்" பத்திரிகை பார்த்ததும் சுமார் நாற்பது வருடங்களுக்கு முன்னைய நிகழ்வுகட்கு எம்மைப் பின் தள்ளிச் சென்றது. காரணம் காந்தீயம் சி.க.வேலாயுதபிள்ளை அவர்களின் நினைவுகளேயாகும்.

நாங்கள் கல்வி பயின்று கொண்டிருந்த காலத்தில் (திரு சி.க.வேலாயுதபிள்ளை, அன்று அவரைக் காந்தீயம் அல்லது ஊர்க்குருவி என்றே நாம் அழைப்போம்) இவர் செய்த பணிகள் அளப்பில பத்திரிகையிற் குறிப்பிட்டிருந்தது போல கதர்வேட்டியும், கதர்மடித்த சால்வையும், கைப்பையும், குடையுமாக எளிய தோற்றத்துடன் எங்குமே போய்வருவார்.

இங்கிருந்து நான் கொழும்பில் போய் நின்ற போது ஒரு முறை இரத்மலான விமான நிலையத்தில் சாதாரண எளிமையான காந்தீய கதர் உடையுடனேயே அங்கு அவர்வந்து நின்ற போது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. பலர் அவரைக் கண்டு மிகவும் மரியாதையுடனும், பணிவாகவும் பேசினார்கள். அப்பொழுது அவர் மற்றவர்கட்குத் தனது ஊர்ப்பாடசாலை மாணவன் என்றே என்னைப் பெருமையாகக் கூறி நல்ல ஆலோசனைகளும் கூறினார்.

அவர் நீர்வேலியில் அமைத்த காந்தீய ஆச்சிரமம் இன்றும் அவரை நினைவூட்டிக் கொண்டிருக்கிறது. அவர் பத்திரிகைகளுக்கும் "ஊர்க்குருவி" என்ற பெயரில் நல்ல ஆக்கங்கள், காந்தீயக் கட்டுரைகள், ஊர்ச்செய்திகள் என்பன கொடுப்பார். அதனாற்றான் அவரை ஊர்க்குருவி என நாம் அழைப்போம். இவரைக் "காந்தீயம்" நினைவு கூர்ந்து கட்டுரை தந்திருப்பது மிகவும் சிறந்த முயற்சியாகும்.

*சிவஸ்ரீ கு.தியாகராஜக்குருக்கள்*
(நீர்வைமணி)
நீர்வேலி

### தொண்டர் இதயம்

அகில இலங்கை காந்திசேவா சங்கத்தில் சில ஆண்டுகளுக்கு முன்தான் இணைந்து கொண்டேன். அன்றிலிருந்து சங்கத்தில் நான் தீவிர ஈடுபாடு கொண்டுள்ளேன். "காந்தீயம்" இதழைக் கண்டதிலிருந்து நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன்.

*-சி.ஜெயகணேசன்*
ஆசிரியர், சாவகச்சேரி.

# கிராம வாசிகளின் வாழ்க்கையில் தோன்றும் விருத்தி தான் உண்மையில் பொதுமக்கள் விருத்தி

**1953 முதலாவது சர்வோதய மகாநாட்டில் ச.பேரின்பநாயகன்**

அகில இலங்கை காந்தி சேவா சங்க ஆதரவில் நீர்வேலி - காந்தி நகரில் 1953ஆம் ஆண்டு மே மாதம் 29ம் திகதி நடைபெற்ற முதலாவது சர்வோதய மகாநாட்டில் தலைவர் திரு.ச.பேரின்பநாயகன் நிகழ்த்திய தலைமை உரையிலிருந்து..............

எம் நாட்டின் இன்றைய நிலையில் சர்வோதய தத்துவம் எங்ஙனம் பயன்படக்கூடுமென்று சிறிது ஆராய்வோம். அந்நியருக்கு அடிமையாக இருந்த காலத்தில் எமது சீர்கெட்ட நிலைக்கு அந்நிய அரசாங்கமே காரணமென்று கூறிவிட்டு வாளாவிருந்தோம். குறை எதுவானாலும் இந்த நியாயமொன்றையே சொல்லித் திருப்தி செய்து கொண்டோம். இப்போது எமது நாட்டின் நன்மை, தீமை யாவற்றிற்கும் நாமே பொறுப்பாளிகள். இப்பொறுப்பை வேறுயாரிடமாவது சுமத்த இனிமேல் முடியாது. எமது கல்வி நிலை, பொருளாதார நிலை, சமூகநிலை, முதலியவற்றிற் காணும் ஊழல்களை வேறுயாரும் பரிகரிக்க முடியாது. இக்கடனை நாமே தீர்க்க வேண்டும். நாமே தீர்க்க முடியும். எமது நாட்டில் பட்டின வாசிகள் மிகச்சிலரே. இயந்திர நாகரிகத்தின் பலனை அனுபவிப்போரும் மிகச்சிலரே. கிராமவாசிகளே கூடிய தொகையினர். கிராம வாசிகளின் வாழ்க்கையில் தோன்றும் விருத்தி தான் உண்மையிற் பொதுமக்கள் விருத்தி. இயந்திர நாகரிகத்தை முற்றாய் ஒழிக்க வேண்டுமென்றோ அல்லது அகற்றிவிட வேண்டுமென்றோ நான் கூற முன்வரவில்லை. ஆனால் இயந்திர நாகரிகத்தையே முற்றாய்க் கடைப்பிடித்து வாழ்வது எம்மூரவருக்குக் கைகூடாது. இன்றும் இன்னும் பல்லாண்டு கட்டும், கிராம நாகரிகமே எமக்கு உண்மையில் ஈடேற்றமளிக்கும். உணவுப் பொருள் விருத்தி, குடிசைக்கைத்தொழில் விருத்தி, முதலியவற்றால் கிராம வாழ்க்கை பண்பாடும் புனிதமும் பெறவேண்டும். கிராம மக்களிடம் ஒருவரோடொருவர் ஒத்துழைத்துக் கிராம நன்மைக்காக வாழும் மனநிலை தோன்ற வேண்டும். இம்மனநிலை இறைவனருளால் விண்ணிலிருந்து மண்ணில் வந்திறங்கமாட்டாது. மக்கள் முயற்சியாற் தான் இது தோன்றும்.

ஒவ்வொரு கிராமத்திலும் என்னென்ன குறைகள் தேவைகள் இருக்கின்றன. என்னென்ன பொருளாக்க வசதிகள் இருக்கின்றன. என்னென்ன தொழில்கள் பரம்பரையாய்ப் பயிலப்பட்டு வருகின்றன. நீர்வளமும் நிலவளமும் என்னென்ன பயிருக்கும் என்னென்ன தொழிலுக்கும் வாய்ப்புடையன என இன்னோரன்ன முறையில் ஆராய்ந்து ஒவ்வொரு தனிக்கிராமத்திற்கும் தனித்தனி திட்டமிட்டுக் கிராம புனருத்தாரண வேலை நடக்க வேண்டும். பரும்படியாக ஒரு நாட்டுக்கு ஆக்கப்படும் திட்டத்தைப் போலல்லாமல் நுட்பமாக விபரமாக ஒவ்வொரு கிராமத்தின் விபரங்களையும் ஆராய்ந்து செய்யும் திட்டமே கிராம வாழ்க்கையின் விருத்திக்குப் பயன்படும். காந்தியடிகள் பருத்தி வளர்ப்பையும், நெசவுத் தொழிலையும் தமது ஆக்க வேலைத்திட்டத்துக்குப் பெரிதும் வற்புறுத்தினார்: கையாண்டார். ஆகையால் எல்லா நாட்டிலும், எல்லா ஊரிலும், எல்லாக்கிராமத்திலும் இத்தொழில்களே சிறப்பாக விருத்தி செய்யப்பட வேண்டும், என வாதாடுவது சரியென எனக்குத் தோன்றவில்லை. பனை மரங்களும் பனையிலிருந்து வரும் ஓலை, மட்டை, நார் கருப்பநீர் முதலிய மூலப் பொருள்களும் ஏராளமாயிருக்கும் யாழ்ப்பாணத்திலே பனை மரத்திற்கும் பனம் பொருள்களுக்கும் கிராம முன்னேற்றத் திட்டங்களில் முக்கிய இடம் இருக்க வேண்டுமென்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

அரசினர் ஆதரவு பெறும் சமூக சேவா நிலையங்களும், கிராம முன்னேற்றச் சங்கங்களும் இப்பணியைச் செய்வதற்குத் தகுதியுள்ளனவாகத் தோன்றவில்லை. தமது மனச்சாட்சியைத் திருப்தி செய்வதையே தம் பெருங்கடன் எனக் கொள்ளும் தொண்டர்களே இதற்கு வேண்டியவர்கள். அறிக்கைப்பத்திரங்கள் வெளியிடுவதிலும் புதினப்பத்திரிகைகளில் தமது ஆண்டு விழாக்களைப் பற்றிய செய்திகளை வெளியிடுவதிலும் கருத்தைச் செலுத்தாது, உலகம் பாராட்டாதஉலகம் அற்பமெனப் புறக்கணிக்கின்ற சிறிய அம்சங்களைத் துருவி ஆராய்ந்து, கிராமவளங்களுக்கும் தேவைகளுக்கும் ஏற்பத்திட்டம் வகுத்து, கிராமவாசிகளுடைய ஆர்வத்தைக் கிளரச்செய்யக் கூடிய முறையில் அத்திட்டத்தைச் செயல்முறைக்குக் கொண்டு வந்து செய்யுந் தொண்டே வேண்டியது. இது போன்ற தொண்டின் வளர்ச்சி கண்ணுக்குப் புலப்படாது. கணக்கிட முடியாது. இதைப் பற்றிய புள்ளிவிபரங்களும் எளிதிற் கொடுக்க முடியாது. இத்தொண்டாற்றும் பொறுப்பு அரசாங்கம் மேற்கொள்ளக் கூடிய தொன்றல்ல. எமது அரசாங்கம் இது போன்ற துறைகளிற் கருத்தைச் செலுத்துவதாகவும் காணவில்லை. இது போன்ற வேலைகள் புகழை விரும்புவோருக்கோ, வருவாயை எதிர்பார்ப்பவருக்கோ பொருந்தா ஆயினும் இது போன்ற கைங்கரியங்கள் தோன்றாவிடின் எம் நாட்டின் எதிர்காலம் வளங்குன்றிச் செழிப்பற்று வரண்டு போய்விடும்.

## அன்பர் தபால்

“காந்தீயம்” 2007 பெப்ரவரி - மார்ச் பத்திரிகையின் “உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்” என்ற தலைப்பில் பிரசுரமாகிய செய்தியின் நான்காவது பந்தியில் “உழைக்காமல் இருப்பவனுக்கு உண்பதற்கு மட்டும் என்ன உரிமை இருக்கிறது. உழைக்காமல் உண்பவர்கள் திருடர்களே” என்று தெரிவிக்கப்பட்ட மகாத்மா காந்தியின் கூற்று என்னை மிகமிகக் கவர்ந்துள்ளது.

காந்தீயப் பத்திரிகை மேன்மேலும் நல்ல பிரசுரங்களை வெளியிட்டு வளர்ந்தோங்குக என வாழ்த்துகின்றேன்.

**ந. சதாசிவம்**
உபதபால் அதிபர்
வேரவில்,பூநகரி.

# காந்தீய அரசியலில் அஹிம்சை: ஒரு மெய்யியல் ஆய்வு

**யாழ். பல்கலைக்கழக மெய்யியற்றுறை மாணவன் நவரத்தினம் சிவகரன் தமது இறுதியாண்டு ஆய்வுக் கட்டுரையை மேற்படி தலைப்பில் எழுதியுள்ளார். எமது காந்தி நூலகத்தின் நூல்கள் அவர் ஆய்வுக்குப் பயன்பட்டன. இளந்தலைமுறையினரும் காந்திய சிந்தனையில் ஊக்கம் பெறுவது மகிழ்ச்சிக்குரியதே. பல்கலைக்கழகத்தினர் "காந்தீயக் கல்வியும் சமாதான விஞ்ஞானமும்" என்ற துறையை ஆரம்பிப்பது காலத்திற்கு ஏற்ற தேவை என்பது நிச்சயமாகிறது. அக்கட்டுரையின் சில பகுதிகளை இங்கே தருகிறோம்.**

காந்திஜி அந்நிய ஆதிக்கத்திலிருந்து இந்தியாவை மீட்டது மட்டுமன்றி இந்திய சமூகத்தின் துன்பத்தினைத் துடைக்க அஹிம்சையைப் பயன்படுத்திய விதத்தையும் அதனால் சமூகத்தில் ஏற்பட்ட மாற்றங்களையும் மெய்யியல் ரீதியான பகுப்பாய்வாகத் தருகிறோம்.

அஹிம்சை என்ற சொல் எண்ணக்கரு ஒன்றைச் சுட்டுகிறது. காட்சிப் பொருளை விளக்குவது போல் கருத்துப் பொருளை விளக்க இயலாது. அஹிம்சையின் பொருளை அனுமானம், உவமானம் போன்ற அளவைகளின் வழியாகவே உணரமுடியும்.

ஹிம்சை என்ற எண்ணக்கருவின் எதிர்ப்பொருளில் அஹிம்சை என்ற சொல் பயன்படுகிறது. 'ஹன்' என்ற வினையடி கொல், அழி, துன்புறுத்து, உண்மைக்குப் புறம்பு, சேதத்தை உண்டாக்குவது என்ற பொருள்களைத் தரும். இவற்றை மறுதலிக்கும் ஆன்மபலமே அஹிம்சை. தமிழில் இன்னாசெய்யாமை என்பது பொருத்தமானது. இன்னா என்றால் எண்ணம், சொல், செயல் மூன்றாலும் துன்பம் விளைவிப்பது. அதை விலக்குபவனே அஹிம்சாவாதி. அஹிம்சைக்குப் புற இலக்கணமும் அக இலக்கணமும் உண்டு. அது ஆன்மாவின் பண்பு, உடலின் பண்பு அன்று.

சத்தியத்தின் பாதை எவ்வாறு நேரானதோ அவ்வாறே அஹிம்சையின் பாதையும் இருபுறமும் சாய்ந்து விடாமல் வாளின் முனையில் நடப்பதைப் போன்றது. கயிற்றில் நடப்பவன் தன் கவனத்தை ஒரு குறியில் நிலைக்கச் செய்து, தன் சாகசத்தைக் காட்டுகிறான். அதினிலும் மிகக் கூடிய அளவு கவனம் குவிநிலை நோக்கு அவசியம் ஒரு கணம் கவனம் பிசகினாலும் பாதை தவறிவிடும். இடைவிடாது பாடுபட்டால் தான் சத்தியம், அஹிம்சை என்ற கலைகள் கைவரும். யோகி ஆவதற்கு முதற்படி இதுவே. "அஹிம்சா பரமோதர்ம", "அறவினை யாதெனில் கொல்லாமை", "கொல்லா விரதம் குவலய மெல்லாம் ஓங்குக" என்பன நல்லோர் வாக்குகள்.

அஹிம்சையின் பல்வேறு பரிமாணங்களை ஒருங்கிணைத்துப் பின்பற்ற வேண்டும். ஒரு அம்சத்தை வற்புறுத்தி, மற்ற அம்சங்களை விடுவது அஹிம்சை ஆகாது. புலால் உண்பதை விட்டு, படையில் பணிபுரிவதோ, ஆயுத ஆய்வு செய்வதோ, அநியாய வட்டி வாங்குவதோ, அடுத்தவன் வீட்டுக்கு நெருப்பு வைப்பதோ அஹிம்சை ஆகாது.

வேத, உபநிடதங்களில் வேள்வி என்பதன் பொருள் தியாகம். பிற பொருள்களில் பற்று இன்றிப் பரம்பொருளுக்கென அர்ப்பணிப்பது முதல் தன்னையே பரித்தியாகம் செய்வது வரை அதன் பொருள் விரிகின்றது. சாந்தோக்கிய உபநிடதத்தில் அஹிம்சை, சத்தியம், அஸ்தேயம் (கள்ளாமை), பிரமசரியம், அபரிக்கிரகம், (பிறர் பொருளில் இச்சை வையாமை) ஆகிய ஐந்தும் வலியுறுத்தப்படுகின்றன.

ஜெனம், பௌத்தம் அஹிம்சை, பற்றிக் கொண்ட கருத்துகள் தரப்பட்டுள்ளன. அவற்றில் உள்ள முரண்பாடுகளும் ஓரளவு சுட்டப்பட்டுள்ளன.

மனுதர்ம சாத்திரம் அஹிம்சை, சத்தியம் பற்றி வலியுறுத்தினாலும் கால, இட, பண்பாட்டுப் பேதங்களுக்கு ஏற்ப சில விதிகளுக்கு விலக்கு அளிக்கிறது.

திருக்குறள், அஹிம்சை மனித சமுதாயத்தையே மாற்றி அமைக்கும் மெய்யியற் கருத்துக்களை சமயச் சார்பற்ற பகுத்தறிவுடன் விளக்கியுள்ளது. இப்பகுதி விரிவாக, நன்றாக அமைந்துள்ளது.

அஹிம்சை பற்றிய மேனாட்டுச் சிந்தனையாளர்களான பிளேட்டோ (கி.மு 439-347), சைமன்ஸ் (1492-1539), ரொஸ்மன் (1465-1536), கான்ற் (1724-1804), ரூசோ, தோரோ (1817-1862), டால்ஸ்டாய் (1828-1910), ஜோர்ஜ்பாக்ஸ் (1624-1691), வில்லியம்பென் (1644-1778), எமர்சன் (1803-1882) போன்றவர்களின் பங்களிப்புடன் மாட்டின் லூதர்கிங் காந்தீய வழியில் சிறுபான்மை இனத்தவரின் உரிமைப் போரை நடத்திய விதமும் விளக்கப்பட்டுள்ளது.

அஹிம்சை பற்றிய காந்திஜியின் அடிப்படைச் சிந்தனைகள், உண்மையும் அஹிம்சையும், சமூக ஒழுக்கமும் நீதியும் அஹிம்சையும், தீண்டாமையும் அகிம்சையும் பற்றிய பகுதிகள் நன்றாகச் சுருக்கி எழுதப்பட்டுள்ளன. முக்கிய அத்தியாயம் காந்தீய அரசியலும் அஹிம்சையும், சத்தியாக்கிரகம், துராக்கிரகம், உண்ணாவிரதம், ஒத்துழையாமை, சட்டமறுப்பு, வன்முறையும் அஹிம்சையும், இன ஒருமைப்பாடும் அஹிம்சையும், நன்றாக விளக்கப்பட்டுள்ளன. இவ்வாய்வு மாணவர் வருங் காலத்தில் நல்ல காந்தீய மெய்யியல் ஆய்வாளராவர் என நம்புகிறோம்.

**அரசியல் பாம்பு**

அரசியலில் நான் பங்கெடுத்துக்கொள்வதாகத் தோன்றுகின்றதென்றால், அதற்குக் காரணம், இன்று அரசியல் ஒரு பாம்பைப்போல் நம்மைச் சுற்றிக்கொண்டிருக்கிறது. எவ்வளவு தான் ஒருவன் முயன்றாலும் அதிலிருந்து விடுபடமுடியவில்லை. எனவே நான் பாம்புடன் போராட விரும்புகிறேன்.

-மகாத்மா காந்தி

## உலக ஆசிரியர் தினம்

அக்ரோபர் ஆறுதனில் அகிலம் போற்றும்
ஆசிரியர் தினம் ஆவதும் அறிவோம்
மக்களாய்ப் பிறந்து வாழ்ந்தவர் தம்மில்
மகத்துவம் மிக்க மாந்தராய் உயர்ந்து
எக்காலும் எவரும் இதயத்தில் நினைக்க
ஏணிப் படியாய் இருந்து பணிபுரிந்த
இக்காலத் தெய்வ வடிவாம் ஆசிரியரை
இருகரங் கூப்பி வணங்குதல் செய்வோம்

அறிவியல் வாதிகள் ஆன்மீக வாதிகள்
அரசியல் 'வாதிகள் அருங்கலை ஞானிகள்
பொறியிய லாளர்கள் பொருளிய லாளர்கள்
பொறுப்புள டாக்ரர் போற்றும் கணக்காளர்
நெறிநிற்கும் நீதிவான் நேரிய சட்டவான்
நிதானியாம் தொண்டர் நிமிர் நடை மக்களைச்
செறிவொடு சிறப்புடன் சென்ற நாடெல்லாம்
படைத்தற் கடமை புரிந்த ஆசான்

அல்லல் உற்றோர் ஆளணி அற்றோர்
ஆண்டவனாலும் கைவிடப் பட்டோர்
எல்லை கடந்த ஏழ்மையில் உழல்வோர்
ஏழனத் தாலே இதயம் இழந்தோர்
எல்லவர் தம்மையும் ஏற்றுளம் இரங்கி
அன்னவர் பிள்ளைகள் அறியாமை போக்கிக்
கல்வியில் வல்லவர் ஆக்கிடும் நோக்கிற்
காத்தற் கடமை கற்பித்த ஆசான்

பொய்யும் புரட்டும் புழுகும் புரையோடும்
களவுத் தொழிலும் கருமச் செயலும்
உய்யும் நோக்கில் ஊழல் முறையும்
ஊரைக் கெடுக்கும் கோளும் குறையும்
செய்யும் தொழிலில் திருட்டும் வெருட்டும்
சேவையிற் தேவையிற் சேர்புறக் கணிப்பும்
மெய்யாய் எல்லவர் உளத்திலும் உதியா
அழித்தற் கடமை ஆற்றிய ஆசான்.

முத்தொழில் புரியும் முதல்வனைப் போல
மூலை முடுக்கெலாம் முனைப்புடன் சென்று
வித்தையும் புத்தியும் வேகமாய் வளர
மெழுகு வர்த்தியாய் உருகும் ஆசிரிய
உத்தமர் தம்மை உலகெலாம் மாணவர்
பெற்றோர் மற்றோர் பெருமையாய்ப் போற்றப்
பத்தரை மாற்றுத் தங்கங்கள் ஆகப்
பல்லாண்டு பல்லாண்டு பல்லாண்டு வாழி.

**ஆ.வடிவேலு**
ஓய்வு பெற்ற அதிபர்
தும்பளை, பருத்தித்துறை.

**"உழைப்பே உயர்வுக்கு வழி"**

*-மகாத்மா காந்தி-*

## மகாத்மா காந்தியடிகளின் வழி ............

1. சத்தியம் அகிம்சை
நித்தியம் கைக்கொண்டு
வெற்றி கண்டார் காந்திஜி - அந்த
வித்தகர் வழி பற்றி
எத்திறம் நடந்தாலும்
பத்திரமாய் வாழலாம்

2. அறுபது கோடி யான
அத்தனை மக்களையும்
அணைத்துத் தன் கையிற் கொண்டே
இறுதி வரை அகிம்சை
இனிய சத்தியாக் கிரகம்
ஏந்தியே போர் புரிந்தார்

3. சாதி சமயத்தினால்
சச்சரவுப் படாமல்
நீதியாய் நடக்கச் சொன்னார் - அந்த
சந்திப்பால் மக்களெல்லாம்
நம்பிக்கை கொண்டவரை
சார்ந்து வணங்கி நின்றார்

4. கதரை உடுக்கச் சொன்னார்
கைத்தொழில் செய்யச் சொல்லி
காட்டினார் - வழியையெல்லாம் - அதனால்
கடவுள் போல் அடிகளாரை
கைகட்டி மக்கள் அவர்
கால்மலர் ஏத்தி நின்றார்.

**-பெரும் புலவர் கலாபூஷணம்**
வை.க.சிற்றம்பலவனார்.

## சுகாதாரம் தொடர்பான பிரசுரங்கள்

புதுக்குடியிருப்பு அரசினர் மருத்துவ மனையில் பணிபுரியும் டாக்டர் சிவசிவ அவர்கள் சுகாதாரம் தொடர்பான சில பிரசுரங்களை வெளியிட்டு வருகிறார்.

'நல்ல ஆரோக்கியத்திற்கு சில குறிப்புகள்' என்ற தலைப்பில் மனிதரின் சுகவாழ்விற்கு கடைப்பிடிக்கவேண்டிய உணவுப் பழக்கவழக்கங்களை விரிவாக டாக்டர் விபரித்துள்ளார். 'நல்லவற்றை பிறருடன் பகிர்ந்து கொள்வோம்' என்ற தலைப்பில் வெளியாகியுள்ள பிரசுரம் நோய்கள் நம்மை அணுகாது தடுக்கும் முறைகளையும், நோய் ஏற்பட்ட நிலையில் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளையும், பெண்கள் கர்ப்பகாலத்தில் கவனிக்க வேண்டியவைகளையும் தெளிவாகச் சொல்கின்றது. மனிதன் தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி சாந்தமாக வாழ்வதற்குரிய நல்ல அறிவுரைகளை இன்னொரு பிரசுரம் தாங்கி வந்துள்ளது.

மேற்குறித்த செய்திகளைப் படிக்கவிரும்பும் அன்பர்கள் யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத் தெரு 171 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள அகில இலங்கை காந்தி சேவா சங்க அலுவலகத்தில் இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

இப்பத்திரிகை 171, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் வசிக்கும்
திரு.சோ.க.தம்பிப்பிள்ளை அவர்களால் அகில இலங்கை காந்தி சேவா சங்கத்திற்காக வவுனியா,
1ஆம் குறுக்குத்தெரு, இலக்கம் 61-B, இல் அமைந்துள்ள வாணி கணினிப் பதிப்பகத்தில்
2007ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.